002337
04 MAR 2016

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை – பழங்குடியினர் மேம்பாடு – 2015–2016–ம் ஆண்டில் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை தாட்கோ மூலம் செயல்படுத்துவதற்கு – செயல் திட்டம் வழிகாட்டி நெறிமுறைகள் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (பமே–1(2)) துறை**

அரசாணை (ப) எண். 59 — நாள் 03.03.2016

மன்மத வருடம் மாசி 20
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்கப்பட்டது:

1. மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களின் கடித எண்.ஜி2/3155/2015, நாள் 05.06.2015.
2. அரசு கடித எண். 9143/பமே1/2015–1, நாள் 17.07.2015.
3. மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களின் கடித எண்.ஜி2/3155/2015, நாள் 14.08.2015.

--------

**ஆணை: –**

மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்கள் மேலே 1–இல் படிக்கப்பட்ட 05.06.2015 நாளிட்ட கடிதத்தில், 2015–2016–ஆம் நிதியாண்டில் பழங்குடியினர்களுக்கான பல்வேறு பொருளாதார மேம்பாட்டு திட்டங்களை தாட்கோ மூலம் செயல்படுத்திட 21.05.2015 அன்று நடந்த 201–ஆம் இயக்குநர் குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு ரூ.5.00 கோடிக்கான செயல்திட்டத்திற்கு இயக்குநர் குழுமம் அனுமதி அளித்ததன் அடிப்படையில் செயல்திட்டம் மற்றும் வழிகாட்டி நெறிமுறைகளுக்கு ஒப்புதல் அளித்து அரசாணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) அவர்களின் மேற்காணும் கருத்துருவினை அரசு பரிசீலனை செய்து அக்கருத்துருவினை ஏற்றுக்கொண்டு, இவ்வரசாணையின் இணைப்பில் குறிப்பிட்டுள்ள பழங்குடியின மக்களுக்காக பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலம் 2015–2016–ஆம் நிதியாண்டில் ரூ.195.56 இலட்சம் (ரூபாய் ஒரு கோடியே தொன்னூற்று ஐந்தாயிரம் இலட்சத்து ஐம்பது ஆறாயிரம்

மட்டும்) செலவில் செயல்படுத்த வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் செயல்திட்ட அறிக்கை ஆகியவற்றிற்கு ஒப்புதல் வழங்கி அரசு ஆணையிடுகிறது

3. மேலும் பழங்குடியினர் நிலம் வாங்கும் திட்டம், நிலம் மேம்பாடு திட்டம் ஆகிய திட்டங்களுக்கு நிலம் மற்றும் அதற்கான மதிப்பீடுகளை ஆய்வு செய்து குறிப்பான கருத்துருவினை (Specific proposal) அரசுக்கு அனுப்புமாறும் மற்றும் தொழில் முனைவோர் திட்டத்தினைப் பொறுத்தமட்டில் (EDP) ஆடு வளர்ப்பு, பழம் உற்பத்தி, கிழங்கு உற்பத்தி போன்ற கிராமப்புறங்களை சார்ந்துள்ள தொழில்கள் என்பதால் இத்திட்டத்தை சுய உதவிக்குழுக்களுடன் (SHG) இணைத்து செயல்படுத்தலாம். 2015–16 ஆம் ஆண்டின் இறுதி பகுதி என்பதால் கூடுதல் விண்ணப்பங்கள் பெறப்படின் அவைகள் அடுத்த நிதியாண்டில் (2016–17இல்) அனுமதிக்கப்படும்.

4. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.12871/ஆதி(ம)பந/2016–1, நாள் 02.03.2016–ல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

ப. அண்ணாமலை,
அரசு செயலாளர்.

பெறுநர்,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்,
தேனாம்பேட்டை சென்னை – 18.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை –5.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்
(க.மா.பா) துறை, சென்னை – 9
நிதித் {(ஆதி(ம)பந) , வரவு செலவு பொது–I,
வரவு செலவு பொது – II} துறை, சென்னை – 9.
மாநிலக்கணக்காயர், சென்னை –6/18/35/
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு) சென்னை –8.

<u>நகல் :-</u>
அமைச்சர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
அவர்களின் தனிச் செயலர், சென்னை–9
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, சென்னை–9
இருப்புக்கோப்பு/ உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

3.3.16

பிரிவு அலுவலர்.

## இணைப்பு –I

**பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் 2015–16 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | திட்டத்தின் பெயர் | எண்ணம் | திட்ட மதிப்பீடு ஒரு அலகு | மானியத் தொகை ஒரு அலகு | வங்கிக் கடன் ஒரு அலகு | மொத்த மானியம் தொகை | மொத்த வங்கிக் கடன் | மொத்த திட்ட தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEPY) பயணியர் வாகனம்/ ஈப்பு | 21 | 8.00 | 4.00 | 4.00 | 84.00 | 84.00 | 168.00 |
| 2. | மருத்துவமனை, மருந்துக்கடை, கண்கண்ணாடியகம், முடநீக்குமையம், இரத்தப் பரிசோதனை நிலையம் அமைத்தல் (SEPY Clinic) | 10 | 7.50 | 3.75 | 3.75 | 37.50 | 37.50 | 75.00 |
| 3. | சட்டப்பட்டதாரிகளுக்கு நிதியுதவி | 10 | 0.50 | 0.50 | 0 | 5.00 | 0 | 5.00 |
| 4. | மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி | 64 | 0.20 | 0.20 | 0 | 12.80 | 0 | 12.80 |
| 5. | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான சுழல்நிதி (RF) 14குழு | 168 | 0.75 | 0.25 | 0.5 | 3.50 | 7.00 | 10.50 |
| 6. | மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார கடன் (EA) 10 குழு | 120 | 7.5 | 3.75 | 3.75 | 37.50 | 37.5 | 75.00 |
| 7. | இந்திய குடிமைப்பணி/ தமிழ்நாடு தேர்வாணையத் தொகுதி–1 முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி | 10 | 0.50 | 0.5 | 0 | 5.00 | 0 | 5.00 |
| 8. | தமிழ்நாடு தேர்வாணையத் தொகுதி– II | 19 | 0.05 | 0.05 | 0 | 0.95 | 0 | 0.95 |
| 9. | திட்டமதிப்பாய்வு மற்றும் நிர்வாகச் செலவினங்கள் (5%) | | | | | 9.31 | 0 | 9.31 |
| | மொத்தம் | 422 | | | | 195.56 | 166 | 361.56 |

ப. அண்ணாமலை,
அரசு செயலாளர்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஏ.ரா. தங்கம் 3.3.16

பிரிவு அலுவலர்.

## இணைப்பு – II

## பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டு திட்டத்திற்கான வழிகாட்டி நெறிமுறைகள் 2015–2016

பழங்குடியின மக்களின் வாழ்க்கைதரத்தை சமுதாயத்தில் இதர பிரிவினருக்கு இணையாக உயர்த்தும் உன்னத நோக்கில் அரசு பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதன்படி இளைஞர்களுக்கு திறன் வளர்க்கும் பயிற்சி, தொழில்முனைவோர் திட்டம், சுய உதவி குழுக்களுக்கு நிதியுதவி போன்ற திட்டங்கள் மூலம் பழங்குடியின மக்களின் வாழ்க்கைத்தரம் மற்றும் பொருளாதார நிலையினை உயர்த்திட அரசு 2015–2016–ஆம் ஆண்டில் அம்மக்களுக்கு கீழ்கண்ட பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

1. பழங்குடியின இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்பு திட்டம்
   (Self Employment programme for youth (SEPY)
2. மருத்துவமனை, மருந்துக்கடை, கண் கண்ணாடியகம், முடநீக்கு மையம், இரத்த பரிசோதனை நிலையம் அமைத்தல்
3. மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான சுழல்நிதி திட்டம் மற்றும் மகளிருக்கான பொருளாதார கடனுதவி திட்டம்
4. இந்திய குடிமைப்பணி/ தமிழ்நாடு தேர்வாணையத் தொகுதி–1 முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி திட்டம்
5. தமிழ்நாடு தேர்வாணையத் தொகுதி – II முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி திட்டம்
6. சட்டப்பட்டதாரிகளுக்கு தொழில் துவங்குவதற்கு நிதியுதவி
7. மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை திட்டம்

### 1. பழங்குடியின இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் (Self Employment Programme for Youth(SEPY))

**நோக்கம் :–**

பழங்குடியின இளைஞர்கள் சுயமாக வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி வாழ்க்கை தரத்தை உயர்த்தி கொள்ளும் நோக்கில் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயணியர் வாகனம்/ஈப்பு வாங்கலாம்.

**தகுதி:–**

1. விண்ணப்பதாரர் பழங்குடியினர் இனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும்.
2. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
3. வயது 18–க்கு மேலும் 35 வயதிற்குள்ளாகவும் இருக்கவேண்டும்.
4. கடன் மற்றும் மானியம் கோரும் தொழிலில் முன்அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.
5. விண்ணப்பதாரர் ஓட்டுநர் உரிமம் மற்றும் வில்லை (பேட்ஜ்) மேலொப்பம் பெற்றிருக்க வேண்டும்.

**விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்யும் முறை:–**

மாவட்ட மேலாளர்களால் பெறப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து மாவட்ட அளவிலான கீழ்கண்ட அலுவலர்களைக் கொண்ட தேர்வுக் குழு மூலம் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுவர்.

| | | |
|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித் தலைவர் அல்லது மாவட்ட ஆட்சித்தலைவரது பிரதிநிதி | – தலைவர் |
| 2. | மாவட்ட மேலாளர், தாட்கோ | – ஒருங்கிணைப்பாளர் |
| 3. | மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் | – உறுப்பினர் |
| 4. | பொது மேலாளர் மாவட்ட தொழில் மையம் | – உறுப்பினர் |
| 5. | துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(ஆதிந) | – உறுப்பினர் |
| 6. | சேவைப் பகுதி வங்கியாளர் | – உறுப்பினர் |

தேர்வுக்குழு முடிவு செய்து விண்ணப்பங்களை வங்கிக்குப் பரிந்துரை செய்யும்.

**மானிய விவரம்:–**

தாட்கோ திட்ட மதிப்பீட்டில் அதிகபட்சமாக 50% அல்லது ரூ.4.00இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை மான்யமாக வழங்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக (Backend Subsidy) இருக்கும். இத்திட்டத்தின்கீழ் பயணியர் வாகனம்/ஈப்பு வாங்கலாம்.

**2. மருத்துவமனை, மருந்துக்கடை, கண் கண்ணாடியகம், முடநீக்கு மையம், இரத்த பரிசோதனை நிலையம் அமைத்தல்**

**தகுதி :–**

கிளினிக் (Clinic) அமைப்பதற்கு குறைந்தபட்சம் எம்.பி.பி.எஸ், (M.B.B.S), பி.டி.எஸ், (B.D.S), சித்தா (B.S.M.S), ஆயூர்வேத மருத்துவம் (BAMS) மற்றும் இயற்கை வைத்தியத்தில் (BNYS) ஆகியவற்றில் ஏதாவது ஒரு பிரிவில் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

- முடநீக்கு மையம்(Physiotheraphy Centre) / மருந்தகம் அமைப்பதற்கு உரிய முடநீக்கவியல் பட்டப்படிப்பு (Physiotheraphy) மற்றும் மருந்தாளுனர் (D Pharm/B Pharm) படிப்பும் படித்து உரிய கவுன்சிலில் (Council) பதிவு செய்திருக்க வேண்டும்.
- கண்ணாடியகம் (Opticals), இரத்தப் பரிசோதனை நிலையம் (Lab Technician/Para Medical Centre)அமைப்பதற்கு சம்மந்தப்பட்ட பட்டய/பட்டப் படிப்பு முடித்த சான்றிதழ் வைத்திருக்க வேண்டும்.
- இந்திய மருத்துவ கழகத்தில் (மெடிக்கல் கவுன்சில்/ தொடர்புடைய நிறுவனத்தில் (Competent Authority) பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- குடும்ப ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

**நிபந்தனைகள்**

இத்திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் கீழ்கண்ட நிபந்தனைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

- துவங்க உத்தேசித்துள்ள தொழிலை விண்ணப்பதாரரே தெரிவு செய்து கொள்ள வேண்டும்.

- ❖ இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் சொத்து விண்ணப்பதாரரின் பெயரில் மட்டுமே பதிவு செய்யப்பட வேண்டும்.
- ❖ விண்ணப்பதாரர் தொழில் புரிவதற்காக கடன் மற்றும் மானியம் பெறப்பட்ட மாவட்டத்திலே தொழில் புரிய வேண்டும்.
- ❖ திட்டத்தொகையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் மட்டும் மானியமாக வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்களைத் தேர்வு செய்யும் முறை

மாவட்ட அளவில் கீழ்கண்ட அலுவலர்களைக் கொண்டு மாவட்ட மேலாளர், தாட்கோ தலைமையிலான குழு பயனாளிகளைத் தேர்வு செய்யும்.

| | | |
|---|---|---|
| மாவட்ட மேலாளர், தாட்கோ | : | தலைவர் |
| மேலாளர், மாவட்ட முதன்மை வங்கி | : | உறுப்பினர் |
| பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம் | : | உறுப்பினர் |
| துணை வட்டார வளர்ச்சி அலுவலர், ஆதி திராவிடர் நலம் | : | உறுப்பினர் |
| சேவை பகுதி வங்கியாளர்கள் | : | உறுப்பினர் |
| இணை இயக்குநர் (மருத்துவம்) | : | உறுப்பினர் |

தேர்வு குழுவினரால் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தாட்கோ மான்யத் தொகைக்கான பரிந்துரையுடன் வங்கிக்கு அனுப்பப்படும்.

## 3 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான சுழல்நிதி மற்றும் பொருளாதார கடனுதவித் திட்டம்:

தகுதி:

- ❖ பழங்குடியின மகளிர் மட்டுமே உறுப்பினர்களாக கொண்ட குழுவாக இருக்க வேண்டும்.
- ❖ குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினர்க்கும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். வேறு எந்த அரசு திட்டத்திலும் சுழல்நிதி மற்றும் பொருளாதார கடனுக்கான மானியம் பெற்றிருக்கக் கூடாது.
- ❖ வயது 18 முதல் 60 வரை இருக்க வேண்டும்
- ❖ ஒரு குடும்பத்தைச் சார்ந்த ஒருவர் மட்டுமே உறுப்பினராக இருக்க வேண்டும்.

### சுழல்நிதிக்கான மானியம்:

குழு தொடங்கப்பட்டு ஆறு மாதங்களுக்குப் பிறகு தரம் பிரித்தலில் தேர்ச்சி பெற்றிருப்பின் வங்கியில் சுழல்நிதி பெறுவதற்கு தாட்கோ மானியமாக ரூ.25,000/– வங்கிக்கு விடுவிக்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக இருக்கும்.

## அ) பொருளாதார கடனுதவித் திட்டம் : ( E A to SHG)

தகுதி:

1. பழங்குடியின மகளிர் மட்டுமே உறுப்பினர்களாக கொண்ட குழுவாக இருக்க வேண்டும்.
2. குழு உறுப்பினர்கள் 18 வயது நிரம்பியவர்களாக இருக்க வேண்டும்
3. குழு இரண்டு முறை தரம்பிரித்தல் செய்திருக்கப்பட வேண்டும்.
4. குழுவில் உள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.2.00 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். வேறு எந்த அரசு திட்டத்திலும் பொருளாதார கடனுக்கான மான்யம் பெற்றிருக்கக் கூடாது.

பொருளாதார கடனுக்கான மானியம்:

திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குழுவிற்கும் அதிகபட்சமாக 50 சதவீதம் அல்லது ரூ.3.75 இலட்சம் இதில் எது குறைவானதே அத்தொகை மானியமாக விடுவிக்கப்படும். இவ்வாறு விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாக இருக்கும்.

### *4. இந்திய குடிமைப்பணி/தமிழ்நாடு தேர்வாணையத் தொகுதி–1 முதன்மைத்தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி*

இந்திய குடிமைப்பணி/தமிழ்நாடு தேர்வாணையத்தொகுதி–1 முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்று முதன்மைத்தேர்வு (Main Exam) எழுதும் பழங்குடியின இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு ரூ.50,000/– நிதியுதவி அளிக்கப்படுகிறது.

<u>தகுதி</u>

- ❖ பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- ❖ இந்திய குடிமைப்பணி (அல்லது) தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி–1 முதனிலைத்தேர்வில் தேர்ச்சி பெற்று, முதன்மைத்தேர்வு (Main) எழுதுவதற்காக விண்ணப்பம் செய்திருக்க வேண்டும்.
- ❖ விண்ணப்பதாரர் மாநில, மத்திய அரசு பொதுத்துறை நிறுவனங்கள் ஆகியவற்றில் தற்காலிக அல்லது நிரந்தர பணியில் இல்லாதவராக இருக்க வேண்டும்.
- ❖ குடும்ப ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.3.00 இலட்சமாக நிர்ணயிக்கப்படுகிறது.
- ❖ இந்நிதியுதவி ஒருவருக்கு அதிகபட்சமாக மூன்று முறை வழங்கப்படும்.

<u>நிபந்தனைகள்</u>

1. விடுவிக்கப்படும் தொகையில் புத்தகங்கள் வாங்குதல், நகலிடுதல் (Xerox) மற்றும் பயிற்சி நிறுவன கட்டணங்களை செலுத்துதல் போன்றவற்றிற்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
2. பெறப்பட்ட தொகைக்கான அசல் ரசீதுகள் மற்றும் பயன்படுத்தப்பட்டதற்கான சான்று ஆகியவற்றை தாட்கோ தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**<u>தேர்வு செய்யும் முறை</u>**

விண்ணப்பதாரர்களின் அசல் சான்றிதழ்கள் தாட்கோ தலைமை அலுவலகத்தில் ஆய்வு செய்யப்பட்டு தேர்வு செய்யப்படுவர்.

**<u>நிதிவிடுவிக்கும் முறை</u>**

இலக்கீட்டிற்கு அதிகப்படியான விண்ணப்பங்கள் பெறப்படின் ஆண்டு வருமான அடிப்படையில், பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியுள்ள இளைஞர்களுக்கு ரூ.50,000/–க்கான கோடிட்ட காசோலையாக நேரடியாக வழங்கப்படும்.

**<u>5. தமிழ்நாடு தேர்வாணையத்தொகுதி–II முதன்மைத்தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி</u>**

அரசு துறை பணிகளில் பழங்குடியினரது இட ஒதுக்கீடு பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யவும் அவர்கள் கல்வி மேம்பாடு மற்றும் பணிப்பங்கேற்பினை ஊக்குவிக்கும் விதமாக தமிழ்நாடு அரசு பணியாளர் தொகுதி–II தேர்விற்கு விண்ணப்பிப்பவர்களுக்கு, நபருக்கு ரூ.5000/– வழங்கப்படும்.

**<u>தகுதிகள்</u>**

- ❖ பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- ❖ தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி–II தேர்விற்கு விண்ணப்பித்திருக்க வேண்டும்.
- ❖ இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பயனாளிகளுக்கு வருமான உச்ச வரம்பு ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை.
- ❖ இந்நிதியுதவி ஒருவருக்கு ஒரே முறை மட்டுமே வழங்கப்படும்.

**<u>நிபந்தனைகள்</u>**

- ❖ விடுவிக்கப்படும் தொகையில் புத்தகங்கள் வாங்குதல், நகலிடுதல் (Xerox) மற்றும் பயிற்சி நிறுவன கட்டணங்களை செலுத்துதல் போன்றவற்றிற்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
- ❖ பெறப்பட்ட தொகைக்கான அசல் ரசீதுகள் மற்றும் பயன்படுத்தப்பட்டதற்கான சான்று ஆகியவற்றை தாட்கோ தலைமை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**<u>தேர்வு செய்யும் முறை</u>**

விண்ணப்பதாரர்களின் அசல் சான்றிதழ்கள் தாட்கோ தலைமை அலுவலகத்தில் ஆய்வு செய்யப்பட்டு தேர்வு செய்யப்படுவர்.

**<u>நிதிவிடுவிக்கும் முறை</u>**

பெறப்பட்ட விண்ணப்பங்கள் பரிசீலனை செய்யப்பட்டு தகுதியுள்ள இளைஞர்களுக்கு ரூ.5000/– கோடிட்ட காசோலையாக நேரடியாக வழங்கப்படும்.

## *6. சட்டப்பட்டதாரிகளுக்கு தொழில் துவங்குவதற்கு நிதியுதவி*

*நோக்கம்*

இளம் சட்டப்பட்டதாரிகள் தங்கள் தொழில் துவங்குவதற்கு அலுவலக வாடகை முன்பணம், அறைகலன்களான மேசை, நாற்காலி, அலமாரி மற்றும் சட்டப் புத்தகங்கள் வாங்குவதற்காக ரூ.50,000/–உம் நிதி வழங்கப்படுகிறது.

தகுதி

- விண்ணப்பதாரர் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- வயது வரம்பு 21–45–க்கு மிகாமல் இருக்க வேண்டும்.
- தமிழ்நாடு சட்டக்கல்லூரியில் படித்து, சட்டப்படிப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.
- மூன்று அல்லது 5 வருட கால பட்டப் படிப்பினை படித்திருக்க வேண்டும்.
- தமிழ்நாடு பார் கவுன்சிலில் உறுப்பினராக இருக்க வேண்டும்.
- நீதிமன்றத்தில் வழக்காடுபவராக (Practicing Advocate) இருக்க வேண்டும்.
- இந்நிதியுதவி ஒரு முறை மட்டுமே வழங்கப்படும்.

குறிப்பு

சட்டப் பட்டதாரிகளின் அலுவலகம், மேசை, நாற்காலி வாங்குவதற்கென்றே மத்திய சிறப்பு நிதியுதவி திட்டத்தின் கீழ் ரூ.50,000/– மானியம் வழங்கப்படுவதால், வழக்காடும் வழக்கறிஞர் தங்கள் தொழிலுக்கு தாட்கோ பிற பொருளாதார முன்னேற்றத் திட்டத்தின்கீழ் பயன்பெற இயலாது.

விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பம் மாவட்ட ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின நல அலுவலகத்தில் வழங்கப்படும். பெறப்பட்ட விண்ணப்பங்களை முழுமையாக பூர்த்தி செய்து உரிய ஆவணங்களுடன் மாவட்ட ஆதிதிராவிட நல மற்றும் பழங்குடியின நல அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

தேர்வு செய்யும் முறை

மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் மூலம் பெறப்படும் விண்ணப்பங்கள் இயக்குனர், பழங்குடியினர் நலம் அவர்களால் தாட்கோவிற்கு பரிந்துரை செய்யப்படும்.

நிதிவிடுவிக்கும் முறை

இயக்குனர், பழங்குடியினர் நலம் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டு மனுதாரருக்கு உரிய தொகை ஒருவருக்கு ரூ.50,000/– என்ற அடிப்படையில் இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களுக்கு காசோலையாக தாட்கோவிலிருந்து விடுவிக்கப்படும். விடுவிக்கப்பட்ட தொகைக்கான பயனீட்டுச்சான்று இயக்குநர், பழங்குடியினர் நலம் அவர்களால் தாட்கோவிற்கு அனுப்பி வைக்கப்படும்.

*7. மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி திட்டம்*

நோக்கம்

தாட்கோ திட்டங்கள் எதிலும் உடனடியாக பயன்பெற இயலாதவர்களுக்கு விரைவில் சுயதொழில் புரிந்து பயன்பெறும்பொருட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் நிதியுதவி பெற இயலாத இனங்கள் மற்றும் மாவட்ட ஆட்சியர் உதவி பெற தகுதியுடையவர் அல்லது மிக அவசியம் என்று மாவட்ட ஆட்சியர் முடிவு செய்யும் இனங்களுக்கு ரூ.20,000/– நிதியுதவி வழங்கப்படும். ஆதரவற்ற விதவைகள், மாற்றுத் திறனாளிகள், 40 வயதிற்கு மேற்பட்ட திருமணம் ஆகாத பெண்கள் மற்றும் பெற்றோர்/பாதுகாவலர் இல்லாத குழந்தைகளுக்கு இத்திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

தகுதி

- விண்ணப்பதாரர் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர் தான் வறுமை நிலையில் உள்ளார் என உரிய அலுவலரிடம் சான்று பெறப்பட வேண்டும்.

வயது வரம்பு – ஏதுமில்லை

விண்ணப்பிக்கும் முறை

மாவட்ட ஆட்சியரிடம் இத்திட்டத்தில் பயன்பெற நேரடியாக விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பதாரர்களைத் தேர்வு செய்யும் முறை

இத்திட்டத்திற்கான பயனாளிகள் மாவட்ட ஆட்சியர் அவர்களால் தேர்வு செய்யப்படுபவர்கள் தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பதாரருக்கு மானியம் விடுவிக்கப்படும்.

நிவாரணத்தொகை

விண்ணப்பதாரர் அளித்துள்ள விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு நிவாரணத்தொகை கோடிட்ட காசோலையாக வழங்கப்படும்.

சொத்து உருவாக்கத்தை உறுதி செய்தல்

தாட்கோ மாவட்ட மேலாளர், மானியதொகை விடுவிக்கப்பட்டவுடன் விண்ணப்பதாரர்கள் சொத்து உருவாக்கத்தினை நேரில் தல ஆய்வு மேற்கொண்டு சொத்து உருவாக்கத்தினை உறுதி செய்து கணினியில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

***இத்துடன் கீழ்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளை மாவட்ட மேலாளர்கள் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.***

1. பழங்குடியினர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காக மின்னணு தரவு (Electonic Database System) முறையினை பயன்படுத்தி பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களை திட்டம் மற்றும் வட்டார வாரியாக பிரித்து வெளிப்படையான (Transparent) முறையில் நடவடிக்கைகள் அமைத்திட வேண்டும்.
2. பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களை தேர்வுக் குழுவில் வைப்பதற்கு முன் அசல் சான்றிதழ்கள் சரிபார்த்தல் சான்றினை பெற்றுள்ளதனை உறுதி செய்திருக்க வேண்டும்.

3. சாதி சான்றிதழ்கள் வருவாய் கோட்டாட்சியரால் வழங்கப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும்.
4. தேர்வுக் குழுவால் விண்ணப்பங்கள் தேர்வு செய்ய குறிப்பிட்டுள்ள நாளில் தாசில்தார்/ கிராம நிர்வாக அலுவலர் நிலையில், ஒருவரை தேர்வுக் குழுவிற்கு உதவிட செய்யும் பொருட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு கடித வரைவு வைக்க வேண்டும்.
5. பெறப்பட்ட விண்ணப்பங்களின் மீது விரைவில் நடவடிக்கை மேற்கொண்டு, தேர்வு செய்யப்பட்ட விண்ணப்பங்களை வங்கிகளுக்கு அனுப்பும் பொருட்டு, வங்கியாளர்களை தொடர்பு கொண்டு திட்டத்தின் இலக்கினை குறிப்பிட்ட கால வரையறைக்குள் முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேற்கண்ட திட்டங்களை செயல்படுத்தும்போது தேவைக்கேற்ப ஒதுக்கீடுகளையும், பயனாளிகளின் எண்ணிக்கையையும் மாற்றி அமைத்துக் கொள்ள பழங்குடியினர் நல இயக்குநருடன் கலந்தாலோசித்து பயனாளிகளின் பட்டியலை மின்னணு தரவு (Electonic Database System) இறுதி செய்ய மேலாண்மை இயக்குநர், தாட்கோ அவர்களுக்க அதிகாரம் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

மேலும் நிலம் வாங்கும் திட்டம் மற்றும் நிலம் மேம்பாட்டுத் திட்டத்திற்கு, நிலம் மதிப்பீடு பற்றிய தகவல்களுடன் கருத்துரு அனுப்புமாறும் தொழில் முனைவோர் திட்டத்தினை சுய உதவி குழு திட்டத்துடன் இணைத்து செயல்படுத்துமாறு மேலாண்மை இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ப. அண்ணாமலை,
அரசு செயலாளர்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

ஞா. தங்கம்
3.3.16
பிரிவு அலுவலர்.

03/3/16